# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Thamil Ealam

7 - 11 - 83

## கொலைக்களம் போகவேண்டாம்!

தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் இன அழிப்பும் படுகொலைகளினால் சிறிலங்காவிலுள்ள பல்கலைக்கழகங்களிற் பயிலும் தமிழ் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். சிறிலங்காவிலுள்ள பல்கலைக்கழகங்கள் எந்நேரத்திலும் மீண்டும் ஓர் 'வெலிக்கடையாக' மாறும் நிலை உண்டு. இந்நிலையில் இடம்பெயர்ந்த மாணவர்கள் தெளிவான ஓர் முடிவை, தமிழீழத்தில் தமது வாழ்வை நிலைநிறுத்துவதான முடிவை, எடுக்கவேண்டியுள்ளது.

இம் முடிவின் மூலம் சகல கடினமான வாழ்வினையும் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு உரமூட்டத்தக்க வகையில் எமது கடின உழைப்பை திசைதிருப்புதல் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

இடம்பெயர்ந்த மாணவர்கட்கு தெற்கில் தக்க பாதுகாப்பான நிலைமைகள் உள்ளதாகவும் அவர்களை மீண்டும் அங்கு திரும்பி வருமாறும் அரசாங்கம் தொடர்ச்சியாக கூறிவருகின்றது. இவ்வாறான உறுதிமொழிகள் 1977, 79, 81 கலவரங்களின் போதும் அளிக்கப்பட்டிருந்தன. ஆனால் நடந்தது என்ன? நாடு தழுவிய பெரும் கலவரங்கள் நடைபெறாத வேளையிலும் கூட பல்கலைக்கழகங்களில் சிங்கள இனவெறியர்களால் தமிழ் மாணவர்கள் அச்சுறுத்தப்பட்டும், தாக்கப்பட்டும், கொல்லப்பட்டும் வந்துள்ளார்கள் (அண்மையில் உறுதிமொழி கூறி வரவழைக்கப்பட்டு முகமூடியணிந்த சிங்கள இனவெறியர்களால் தாக்கப்பட்டது யாவரும் அறிந்ததே). எனவே அரசு [illegible]யான இவ் தை 2 அழைப்பானது வளர்ந்துவரும் எம் தேசிய விடுதலைப் போரில் தமிழ் மாணவர்களை சிங்களப் பிரதேசங்களில் பணயக்கைதிகளாக்கும் முயற்சியாகவே உள்ளது.

தொடர்ந்தும் நாம் சிங்களப் பிரதேசங்கட்கு சென்று கொண்டிருப்பதில் அக்கறை செலுத்தாது எமது விடுதலைப் போராட்டத்திற்கு உரமூட்டும் வகையிலும் சுபீட்சம் நிறைந்த எதிர்கால வாழ்வை அபிவிருத்தி செய்யும் வகையிலுமான முயற்சியில் ஈடுபடுவதே பொருத்தமுடையதாகும்.

மாணவர்கள் மீண்டும் வெறும் காகிதப் பட்டங்கட்காகப் படிக்கும் தமது மனோநிலைகளை மாற்றி எமக்குப் பயனளிக்கக் கூடிய அர்த்தபுஷ்டியுள்ள அறிவாராய்ச்சியில் ஈடுபடுதல் வேண்டும். எமது தேசிய விடுதலைப் போராட்டத்தினை வென்றெடுப்பதற்காகவும் எமது பிரதேசத்தினை சுய அபிவிருத்தியில் ஈடுபடுத்தும் வகையிலான புதிய நோக்கம் மிக்க கற்றறிவில் ஈடுபடவேண்டும். இதுவே இன்று எம் மாணவர் முன்னுள்ள பணியும் பொறுப்புமாகும்.

எனவே இடம்பெயர்ந்த தமிழ் மாணவர்கள் தமது வாழ்வினை இங்கு நிலைநிறுத்தும் முயற்சியில் தமிழீழ தேசபக்தியுடன் கூட்டு மனப்பான்மையோடு செயற்படுதல் அவசியமாகும். இந்த வகையில் இடம் பெயர்ந்த தமிழ் மாணவர்கள் தமது முடிவுகளை ஸ்தாபன ரீதியாக ஒத்துழைத்து எமது பிரதேசத்தில் எமது வாழ்வினை நிலைநிறுத்தும் முயற்சிகளில் ஈடுபடுவது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

புரட்சிக்கல்வி பிறக்கட்டும்! தமிழீழம் செழிக்கட்டும்!!

வெல்க தமிழீழம்!

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!!

வே பிரபாகரன்
தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்

அரசியற்குழு
தமிழீழ விடுதலைப் புலிகள்